# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 63 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை டிசம்பர் 06, 2020


## கிளிநொச்சியில் 20 வயது இளைஞனுக்கு கொரோனா

கிளிநொச்சி பாரதி புரத்தைச் சேர்ந்த இருபது வயது இளைஞர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரத்திற்கு முன் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய முதியவர் ஒருவருக்கு 03




## யாழ்., கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு நாளை திங்கள் விடுமுறை

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு நாளை டிசெம்பர் 7ஆம் திகதி திங்கட்கிழமையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர், திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.


சீரற்ற காலநிலை தொடர்பாக கல்வி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

புரெவி புயல் காரணமாக கடந்த வியாழன் மற்றும் 03

## நுவரெலியாவில் 208 பேருக்கு கொரோனா பல பகுதிகள் முடக்கம்

கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2ஆவது அலை ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வரை, 208 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அம்மாவட்ட சுகாதார பணிப்பாளர் வைத்தியர் இமேஷ் பிரதாபசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 4 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சுமார் 311 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 03



## சிறைச்சாலைக் கொத்தணி 2ஆயிரத்து 51ஆக அதிகரிப்பு

சிறைச்சாலை தொற்றாளர்கள் மேலும் அதிகரித்துள்ள நிலையில் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துள்ளது.

சிறைச்சாலை கொத்தணியில் கொரோனா தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 51 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 03

# கொட்டித் தீர்க்கும் மழை புதன் வரை நீடிக்கும்



இன்று பிற்பகல் முதல் யாழ் குடாநாடு உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் கன மழை கொட்டித் தீர்த்துவருகிறது.

இதனால் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

புரெவிப் புயல் காரணமாக கடந்த செவ்வாய் முதுல் கனமழை பெய்துவந்த நிலையில் புரெவிப் புயல் கரையைக் கடந்து மன்னார் வளைகுடாப் பகுதியில் நிலை கொண்டிருந்தது. 03

**தாழ் நிலப் பகுதி மக்களுக்கு எச்சரிக்கை!**

படம் - சப்தசங்கரி

## கொரோனா தனிமைப்படுத்தல் 5 பஸ்களில் யாழிற்கு கொண்டுவரப்பட்ட போகம்பறை சிறைச்சாலைக் கைதிகள்

கண்டி போகம்பறை சிறைச்சாலைக் கைதிகள் 5 பஸ்களில் இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சிறைச்சாலைகளுக்குச் சொந்தமான பஸ்களில் 03

## பருத்தித்துறையில் உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று இல்லை

திடீர் நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று உயிரிழந்திருந்த பருத்தித்துறை புலோலி பகுதியைச் சேர்ந்த முதியவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. 03






**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# வெள்ளவத்தை உட்பட மேலும் பல இடங்கள் தனிமைப்படுத்தலில்

வெள்ளவத்தை கோகிலா வீதி உட்பட கொழும்பில் மூன்று இடங்கள் தனிமைப் படுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

அதன்படி கொம்பனித்தெருவில் உள்ள ஹூனுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, கருவாத்தோட்டத்தில் 60ஆம் தோட்டம், வெள்ளவத்தையில் கோகிலா வீதி என்பன இவ்வாறு தனிமைப்படுத்தப் படவுள்ளன.

குறித்த பகுதிகள் அனைத்தும் நாளை (திங்கட்கிழமை) காலை 5 மணி முதல் இவ்வாறு தனிமைப்படுத்தப்படவுள்ளன என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, நாளை காலை 05.00 மணி முதல் கொழும்பு மாவட்டத்தின் புளூமெண்டல் பொலிஸ் பிரிவு மற்றும் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் விஜயபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள களனி பொலிஸ் பிரிவு நாளை காலை 05.00 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹா மாவட்டம் வத்தளை பொலிஸ் பிரிவின் கெரவலபிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஹேகித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, குருந்துஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவு, எவரிவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, வெலிகடமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகியன நாளை காலை 05 மணி முதல தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக் கப்பட்டுள்ளன.

மேலும் பேலியகொட பொலிஸ் பிரிவின் பேலியகொடவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவு, பேலியகொடை கங்கபட கிராம உத்தியோகத்தர் பிரிவு, மீகஹவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, பட்டிய - வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் நாளை காலை 05.00 மணிமுதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ள பிரதேசங்களாக அறிவிக் கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் கிரிபத்கொடை பொலிஸ் பிரிவின் வெலேகொட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவும் நாளை காலை 05.00 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள தாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள் ளது.

தலைவாசல் Thalaivaasal எங்கள் பாரம்பரியம்

## தினமொரு ஆரோக்கிய தகவல்

**எலிக்காய்ச்சல்**

எலிக்காய்ச்சல் ஆனது பக்ரீரியா (லெப்டோஸ்பைரா) எனும் நுண்ணுயிர் வகையைச் சேர்ந்த ஒரு நுண்ணங்கியினால் உருவாகும் தொற்று நோயாகும். இந்த நுண்ணங்கி தொற்றிய எலிகளின் சிறுநீர் ஊடாகவே அந்த பக்ரீரியா வெளிச்சூழலுக்கு வந்து சேர்கிறது. இவ்வாறு வெளியேறிய பக்ரீரியாவானது வயல்களில் நிற்கும் நீரிலும், சேற்று நீர் தேங்கியுள்ள நீர்ப்பரப்புகளிலும் தங்கிவிடு கிறது.

தேக்கமடைந்த நீரில் செல்லும் போதும் தோலில் இருக்கும் காயங்கள் ஊடகவும், நீர்நிலைகளில் குளிக்கும் போது கண்களில் உள்ள மென்சவ்வுகள் ஊடாகவும், பக்ரீரியா தேங்கி யுள்ள நீரை மனிதர்கள் அருந்தும் போதும் மனித உடலுக்குள் நுழைகிறது.

காய்ச்சல், உடம்பு உளைச் சல், தலையிடி, உடல் களைப்பு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். ஒருபோதும் எந்த ஒரு சிகிச்சை யினையும் பெறாமல் இருந்தால் சிறுநீரகங்கள், இருதயம், மூளை, ஈரல் என்பவை பாதிப்படையும்.

தேவையற்று சேற்று நீரில் நடமாடுவதனை தவிர்ப்பதன் மூலமும் இவ்வாறு சந்தேகமான நீர்த்தேக்கங்களில் குளிப்பதனை யும் குடிப்பதனையும் தவிர்ப்பதன் மூலமும் இந்த தொற்றுநோய் ஏற்படாது தவிர்க்கலாம்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# மஹர சிறைச்சாலை மோதல்: 116 பேரிடம் வாக்குமூலம்

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் குறித்து 116 பேரிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையின் 11 சிறை அதிகாரிகள், இரண்டு மருத்துவர்கள் மற்றும் 25 கைதிகளிடமிருந்து நேற்று மாத்திரம் 38 அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த மோதலில் உயிரிழந்த 11 கைதிகளில் 06 பேர் இதுவரை அடையாளம் காணப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த மோதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சா ளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன கூறினார்.

மஹர சிறைச்சாலையின் கைதிகள் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து மேலும் சில கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தை காரணமாக கொண்டு கடந்த வாரம் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்படி, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

அவர்களுள் காயமடைந்த 71 பேரில் 48 பேருக்கு துரித என்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, உயிரிழந்த 11 பேரில் 9 பேருக்கு கொரோனா தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மரணம் 137ஆக உயர்வு!



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் ஏழு பேர் உயிரி ழந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறி வித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸினால் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கமைய பண்டாரகம பிரதே சத்தைச் சேர்ந்த 91 வயதான ஆணொ ருவர், டிசம்பர் மாதம் 03 ஆம் திகதி வீட்டில் உயிரிழந்துள்ளார். மரணத் திற்கான காரணம் கொவிட் 19 தொற் றுக்கு உள்ளானமையினால் ஏற்பட்ட மாரடைப்பு நிலை என தெரிவிக் கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை கைதியான 53 வயதான ஆணொருவர், டிசம்பர் மாதம் 01ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெமட்டகொடை பிரதேத்தைச் சேர்ந்த 56 வயதான பெண்ணொருவர், தேசிய தொற்று நோயியல் நிறுவனத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற வேளையில், டிசம்பர் மாதம் 04ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், பண்டாரகம பிரதே சத்தைச் சேர்ந்த 81 வயதான பெண் ணொருவர், 2020 நவம்பர் மாதம் 28ஆம் திகதி வீட்டில் உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றுடன் ஏற்பட்ட கடுமையான நுரையீரல் நோய் மற்றும் இருதய நோய் நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதான பெண்ணொருவர், டிசம்பர் 04ஆம் திகதி வீட்டில் உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றுடன் நிமோனியா நோய் நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை கைதி யான 66 வயது ஆணொருவர், சிறைச் சாலை வைத்தியசாலையில் டிசம்பர் மாதம் 02ஆம் திகதி உயிரிழந்துள்ளார் மரணத்திற்கான காரணம் கொவிட் 19 தொற்றுடன் நிமோனியா நிலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதான பெண். தேசிய தொற்று நோயியல் நிறுவனத்தில் சிகிச்சைப் பெற்ற வந்த நிலையில் 2020 டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். மரணத்திற்கான காரணம் நீரிழிவு அதி உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொவிட் 19 நிமோ னியா நிலைமையுடன் உறுப்புகள் செயலிழந்தமை என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முன்னாள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க காலமானார்!



முன்னாள் அமைச்சர் டி. பி.ஏக்கநாயக்க தனது 67ஆவது வயதில் காலமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் கலை மற்றும் கலா சார அமைச்சராகவும் கடமை யாற்றியுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத் திற்கான 2010 பொதுத்தேர் தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் குருநாகலை மாவட்டத்திலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப் பினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# 8ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்?

டிசெம்பர் மாத இறுதிக்குள் குறைந்தது 8 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்த தெரிவித் துள்ளார்.

நாட்டின் பிரதான சிறைச்சாலை வெலிக்கடைவுக்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்ட அவர், சிறையில் இருப்பவர்களை தண்டம் செலுத்த முடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினார்.

நாட்டின் சிறைசாலைகளில் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். சுமார் 11 ஆயிரம் கைதிகளுக்கு போதுமான வசதிகள் உள்ளன.

கைதிகளின் சிறைத் தண்டனையை மாற்ற நான்கு ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

அதன்படி, மதிப்பீட்டிற்கு உட்பட்டு தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றப்படும் என்றும், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்த குறிப்பிட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு வருகை தந்த இராஜாங்க அமைச்சர், அங்கு கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம் நடத்திய கைதிகள் குழுவுடன் பேச்சு நடத்தினார்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகளின் கோரிக்கைகள் பரிசீ லிக்கப்படுவதாக அவர் உறுதியளித்தார்.

அதனை அடுத்து கைதிகளின் எதிர்ப்பு நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இதேவேளை, தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டால், ஆண்களுக்கு 21 ஆண்டுகளும் பெண் களுக்கு 18 ஆண்டுகளும் தண்டனைக் காலமாக மாற்றமடையும்.

அத்தோடு நன்னடைத்தையின் அடிப்படையில் அவர்கள் தண்டனைக் காலத்துக்கு முன்னதாகவே ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நேற்று மட்டும் 669 பேருக்கு கொரோனா தொற்று

நாட்டில் நேற்று மட்டும் 669 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப்பட்டவர்களில் 319 பேர் மினுவாங்கொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 182 பேர் சிறைச்சாலைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் ஏனைய 166 பேரும் பேலியகொட கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 27ஆயிரத்து 226ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 652 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 20 ஆயிரத்து 90 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஏழாயிரத்து ஆறு பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றினால் இதுவரை 130 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மேலும் மூவருக்கு கொரோனா




யாழில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 315 பேருக்கு நேற்று (சனிக்கிழமை) கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்து வீடு திரும்பியிருந்த பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டிருந்தது.

அவருக்கு கண்டறியப்பட்ட நிலையில், தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரின் உறவிர்கள் மூவருக்கே நேற்று கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஓடக்கரைப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் ஏனையவர்களுக்கு தொற்று இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# அங்கஜனின் பெயர்ப் பலகை தவிசாளரிடம் மீண்டும் விசாரணை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி, சபைக்குச் சொந்தமான வீதியை புனரமைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட திட்ட அறிவிப்புப் பெயர்ப்பலகையினை அகற்றியமை தொடர்பில் சனிக்கிழமை இரண்டாவது தடவையும் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் அச்சுவேலி பொலிசாரினால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன், குறித்த அறிவித்தல் பலகையினை மேலதிக விசாரணைக்காக எழுதுமாறு கோரி பொலிஸார் பெற்றுச் சென்றுள்ளனர்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில், காலை நீர்வேலியில் வெள்ள தணிப்புச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் களப்பணியில் ஈடுபட்டிருந்தபோது, அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தவிசாளரைச் சந்தித்து மேலதிக நடவடிக்கைகளுக்காக பிரதேச சபையில் பாதுகாப்பில் உள்ள அறிவித்தல் பலகையினைத் தருமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். நான் கடிதம் ஒன்றைக் கோரி அவணப்படுத்திய பின் மேலதிக நடவடிக்கைக்காக என்ற காரணத்தினால் அப் பொயர்ப்பலகையினை வழங்கினேன். அவ் அறிவித்தல் பலகையினை வழங்கியபோது மீளவும் குறித்த பெயர்ப்பலகை அகற்றப்பட்டமைக்கான காரணம் உள்ளடங்கலாக வாக்குமூலம் ஒன்றை மேலதிகமாக பொலிஸார் பெற்றனர்.

நான் இன்றைய வாக்குமூலத்தில், பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி ஒன்றை எமது சம்மதமோ அனுமதியோ பெறாது புனரமைப்பதற்காக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை அவ் அறிவித்தல் பெயர்ப்பலகையிலும் எமது பதிவிற்கு உட்பட்ட வீதியை புனரமைப்பதற்காக ஊரெழு அம்மன் கோவில் வீதியை புனரமைத்தல் என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் பிரதேச சபை ஒன்றின் பகிரப்பட்ட அதிகாரத்தினை நிலைநாட்டுவதற்காக அகற்றினேன் என்பதை சொல்லியிருக்கின்றேன் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொரிவித்தார்.

# வேலூர் சிறையில் 12 நாட்களைக் கடந்து முருகன் உண்ணாவிரதம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன் கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார். 4ஆம் திகதி அவர் சோர்வடைந்ததையடுத்து அவருக்கு குளுக்கோஸ் ஏற்றப்பட்டது.

சிறை விதிகளை மீறி வெளிநாட்டிலுள்ள ஒருவரிடம் முருகன் வீடியோ அழைப்பில் பேசினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பொலிசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனையடுத்து தனது தாய், மகளுடன் தொலைபேசியில் பேசுவதற்கு அனுமதி கோரி கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தார்.

உண்ணாவிரதத்தினால் சோர்வடைந்த முருகனுக்கு 04ஆம் திகதி குளுக்கோஸ் ஏற்றப்பட்டதாகவும், வைத்தியர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் சிறைத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சிறைச்சாலைக் கொத்தணி...

91 அதிகாரிகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் அதிகாரிகள் 38 பேர் மற்றும் கைதிகள் 562 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ள நிலையில் ஏனையவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்., கிளிநொச்சி...

வெள்ளிக்கிழமை வடமாகாணம் முழுவதும் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமையும் விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளது

## கொட்டித் தீர்க்கும்...

கடந்த 74 மணித்தியாலங்களைத் தாண்டி புயல் நகராது மன்னால் வளைகுடாப் பகுதியில் நிலைகொண்டிருந்த நிலையில் தற்போது புயல நிலை அழிவடைந்து தாழமுக்கமாக நீடித்துவருகின்றது. இந்நிலையில் எதிர்வரும் புதன் கிழமை வரையில் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என வானிலை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள யாழ். பல்கலைகழக புவியியல்துறை விரிவுரையாளர் நா. பிரதீபராஜா மன்னார் வளைகுடாவில் வலுக்குறைந்து தாழமுக்கமாக மாறியுள்ள புரேவி புயலானது கடற்பகுதியில் அழிவடைந்து வருகின்றது.

தற்போது தாழமுக்கமாக மாறியிருக்கும் ”புரவி” புயலினால் எதிர்வரும் புதன் கிழமை வரையில் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என தெரிவித்துள்ளார்.

மேலும் இன்று மாலை தொடக்கம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களிலும் பரவலாக வடமாகாணம் முழுவதிலும் கனமழை பெய்யும். எனவே பொதுமக்கள் குறிப்பாக தாழ்நில பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருப்பது சிறந்தது. என அவர் மேலும் கூறியுள்ளார்.

## பருத்தித்துறையில்...

சுய தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவரின் தந்தை மரடைப்பு காரணமாக இன்று (டிச-06) உயிரிழந்த நிலையில் அவரது சடலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்றைய தினம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குறித்த முதியவர் இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார். அவரது மகள் கொழும்பில் இருந்து திரும்பிய காரணத்தினால் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் முதியவரான தந்தைக்கும் கொரோனா தொற்று எற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பிசிஆர் பரிசோதானைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

குறித்த முதியவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் சில இணையத்தளங்களில் செய்தி வெளியிடப்பட்டு வரும் நிலையில் அது குறித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தரப்பினர் உள்ளிட்ட தொடர்புடைய மருத்துவத்துறை சார்நதவர்களிடம் வினவிய போது குறித்த தகவலை உறுதியாக மறுத்துள்ளனர்.

## கிளிநொச்சியில்...

தொற்று ஏற்பட்டதனை தொடர்ந்து அதனோடு தொடர்பிலிருந்த அருகில் உள்ள குடிநீர் விநியோக நிலையம், மற்றும் மலர்ச்சாலை ஆகியவற்றிலிருந்தவர்களும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குடிநீர் விநியோக நிலையத்திலிருந்த மூவருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் இவர்களோடு தொடர்பிலிருந்த பலருக்கு பிசிஆர் பரிசேதனை முதலாவது பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்படாத நிலையில் முதலாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்டு 11 வது நாள் பெறப்பட்ட பிசிஆர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டபோதே மலர்சாலை இளைஞனுக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்களது மாதிரிகள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நுவரெலியாவில்...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, “நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், வெளிஓயா தோட்டத்தில் தண்டுகள பிரிவு, பொகவந்தலாவ பொகவன பகுதியில் குயினா தோட்டம், கினிகத்தேனை பிளக் ஹோட்டர் தோட்டம் ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மறுஅறிவித்தல் விடுக்கப்படும்வரை இப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடைமுறைகள் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாவது அலையின் போது நுவரெலியா மாவட்டத்துக்கு பெரிதாக பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஓரிரு தொற்றாளர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டனர். அதுவும் வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள். குறிப்பாக தோட்டப்பகுதிகளில் வைரஸ் பரவவில்லை.

எனினும், 2ஆது அலையான பேலியகொட கொத்தணி ஊடாக மீன்வாங்க சென்ற பலருக்கு வைரஸ் தொற்றியது. இதன்மூலம் தோட்டப்பகுதிகளிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் தீபாவளி பண்டிகைக்காக வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் ஊடாக தற்போது வைரஸ் பரவி வருகின்றது.

அதேவேளை முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகளைக் கழுவுதல் உட்பட சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் மக்கள் பின்பற்ற வேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா தனிமைப்படுத்தல்...

அழைத்துவரப்பட்டுள்ளனர்.

சக கைதிகள் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில், குறித்த கைதிகள் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட அனைவரும் கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பாதுகாப்புக்காக யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் அங்கே அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் 11.45 மணியளவில் கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்துக்குச் சிறைச்சாலை பஸ்களில் கொண்டுவரப்பட்ட அனைவரும் குற்றவாளிகளா அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களா (சந்தேகநபர்கள்) என்பது தெரியாத போதிலும் கைதிகள் என்பது மட்டும் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# பேருந்து போக்குவரத்தில் ஏற்படவுள்ள மாற்றம்



பேருந்து பயணங்களின்போது நாளை (திங்கட்கிழமை) முதல் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

விசேடமாக பாடசாலை நேரங்களிலும் அலுவலக நேரங்களிலும் குறித்த முறையில் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர், "பயணிகளை இருக்கையில் மாத்திரம் அழைத்துச் செல்வதற்கு கடந்த தினம் பேருந்து பயணக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் சில வீதிகளில் அதிகமான பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவதாக தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

நாம் எழுத்து மூலம் அறிவித்துள்ளோம். அவ்வாறு செயற்படும் பேருந்துகள் பொறுப்பேற்கப்பட்டு தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் ஒவ்வொரு பேருந்து பயணங்களின் போதும் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது" என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

# யாழில் 72ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் தற்போதுவரை 21 ஆயிரத்து 884 குடும்பங்களை சேர்ந்த 72 ஆயிரத்து 410 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்து பிரிவின் உதவி பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் 42 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 111 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 841 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், 66 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 886 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஆயிரம் ரூபாய் சம்பள விடயத்தில் தொழிலாளர்களை ஏமாற்ற வேண்டாம்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள விடயத்தில் அரசாங்கம் தொழிலாளர்களை ஏமாற்ற வேண்டாம் என கோரி ஹட்டனில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜே.வி.பியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தினால் இந்தப் போராட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஹட்டன் நகர மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

ஏமாற்ற வேண்டாம், வரவு செலவு திட்டத்தில் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை உள்வாங்கு, அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதிய பதாதைகளை போராட்டக்காரர்கள் இதன்போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்க தலைவர் கிட்ணன் செல்வராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை, நுவரெலியா மாவட்ட ஆசிரியர் சங்க செயலாளர் மஞ்சுள சுரவீர முன்னெடுத்தார்.

கொரோனா வைரஸ் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடைவெளிகளை கடைப்பிடித்து 15 உறுப்பினர்களுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கு சலுகை



நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள், நீர் கட்டணத்தை செலுத்துவதற்கு நிவாரண காலம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, நீர் கட்டணம் செலுத்தப்படாத நிலையில், நீர் விநியோகத்தடை ஏற்படுத்தப்பட மாட்டாது என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்கள் உள்ளடங்களாக சில நகரங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பகுதிகளில் வசிப்பவர்களினால் நீர் கட்டணத்தை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலே, ஊடகங்க கருத்து தெரிவித்த நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.


# புரெவியின் தாக்கம் குறைகிறது

புரெவி (BUREVI) சூறாவளி ஒரு ஆழமான தாழமுக்கமாக வலுவிழந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 05.30 மணியளவில் மன்னாருக்கு மேற்குத் திசையில் ஏறத்தாழ 145 கி.மீ தூரத்தில் மையம் கொண்டிருந்தது.

அது நாட்டை விட்டு மேலும் விலகிச் செல்கின்றது. எனவே சூறாவளியின் தாக்கம் படிப்படியாக குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் குறிப்பாக காலை வேளையில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுகாதார முறைகளை பின்பற்றாத 30 பேருந்துகளின் அனுமதி இரத்து

அரசாங்கம் பிறப்பித்த கொரோனா வைரஸ் சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 30 பேருந்துகளின் அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவ்வாறு பேருந்து வண்டிகளின் போக்குவரத்து அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கொரோனா வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கத் தவறும் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# 120 ஆண்டு பழைமை வாய்ந்த கிறித்தவ தேவாலயத்தில் பாரிய தீ



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள 120 ஆண்டு பழைமை வாய்ந்த 19 ஆம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்த கிறித்தவ தேவாலயத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கிழக்கு கிராமத்தில் உள்ள இந்த தேவாயத்தில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 5 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்து காரணமாக அங்கிருந்த கட்டிடம் முழுவதும் எரிந்து நாசமானது என்றும் இதனை அடுத்து அங்கு சென்ற தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் நான்கு தீயணைப்பு வீரர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.